இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 23-01-2025

# பல்கலைக் கழகங்களைக் காப்போம்

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி உள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக மாநில முதலமைச்சர்களுக்கும் எழுதியிருக்கிறார்.

**“பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டும் என 9.1.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதைப் போன்று உங்கள் மாநில சட்டமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றுங்கள்” என்று அதில் குறிப்பிட்டுள்ளார்கள்.**

இதில் மிகமிக முக்கியமானது பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிப்பது ஆகும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகபட்ச அதிகாரத்தை ஆளுநர்களிடம் இருந்து பறித்தாலே, பல்கலைக் கழகங்கள் உருப்பட்டு விடும்.

துணைவேந்தர் தேர்வுக் குழுவில் யு.ஜி.சி. பிரதிநிதியும் இருக்க வேண்டும் என்ற பா.ஜ.க.வின் பிடிவாதத்தால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பல்கலைக் கழகங்களின் செயல்பாடு முடக்கப்பட்டுக் கிடக்கிறது. மேற்கு வங்கத்தில் 32 பல்கலைக் கழகங்களுக்கு 17 மாதங்களாக துணைவேந்தர்கள் இல்லை. உச்சநீதிமன்றம் தலையிட்டுத் தான் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்தது. உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி யு.யு.லலித் தலைமையிலான குழு துணைவேந்தர்களை தேர்வு செய்து அதனை முதலமைச்சருக்கு அனுப்பி, அவர் ஆளுநருக்கு அனுப்பி 17 மாதங்கள் கழித்து 32 பல்கலைக் கழகங்களுக்கும் துணைவேந்தரை நியமித்தார்கள்.

**தமிழ்நாட்டில் ஐந்து பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களை இன்னும் நியமிக்க முடியவில்லை. மாநில முதலமைச்சர்களே பல்கலைக் கழக வேந்தர்களாக இருக்கலாம் என்று சட்டம் போட்டாலும் அதற்கும் ஆளுநர் அனுமதி தராமல் இருக்கிறார். ஆளுநரின் அதிகாரத்தைக் குறைக்கும் சட்டத்துக்கு ஆளுநர் தான் அனுமதி தர வேண்டும் என்று விதி இருப்பதே ஜனநாயக விரோதம் அல்லவா? மாநில அரசின் சட்டங்களுக்கு ஆளுநரின் அனுமதி முக்கியம் என்பதையே நீக்கியாக வேண்டும்.**

**இத்தகைய கெடுதல் போதாது என்று கல்வியாளர்கள் அல்லாதவர்களை துணைவேந்தர்களாக நியமிக்கலாம் என்று இப்போது விதியைக் கொண்டு வந்து நுழைக்கிறார்கள். மஞ்சள் நோட்டீஸ் கொடுத்து மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையின் மேனேஜரை இனி துணைவேந்தர் ஆக்கலாம். கார்ப்பரேட் கம்பெனியாக பல்கலைக் கழகங்களை மாற்றப் போகிறார்கள். இதுதான் யு.ஜி.சி.யின் புதியவிதி ஆகும். இதற்கு என்ன காரணம்? இது ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி. ஆட்களை துணை வேந்தர்களாக நுழைக்கும் தந்திரம் ஆகும். யாரை வேண்டுமானாலும் ஆளுநர் ஆக்கி ஒரு மாநிலத்தின் கழுத்தை அறுக்கலாம் என்பதைப் போல யாரை வேண்டுமானாலும் துணைவேந்தர் ஆக்கி பல்கலைக் கழகங்களை ஒழிக்கலாம் என்று நினைக்கிறார்கள். தமிழிசையோ - கே.டி. ராகவனோ - ஒரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆனால் என்ன ஆகும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.**

அகில இந்திய அளவில் துணைவேந்தர் தேர்வை நடத்தப் போகிறார்களாம். இது தமிழ்நாட்டில் இருக்கும் திறமையான கல்வியாளர்களைப் பாதிக்கும். ஒரு சூரப்பா வந்த பிறகுதான் அண்ணா பல்கலைக் கழகத்தின் பெயரே குட்டிச்சுவரானது. இப்படி பல சூரப்பாக்கள் வருவார்கள்.

பூனா திரைப்படக் கல்லூரிக்கு எந்தத் தகுதியும் இல்லாதவர் நியமிக்கப்பட்டார் என்று அங்குள்ள மாணவர்களே போராட்டம் நடத்தினார்கள். ICSSR ஆராய்வு நிறுவனத்துக்கு அதில் தொடர்பு இல்லாத ஒருவரை தலைவராகப் போட்டார்கள். ICCR என்ற இந்திய கலாச்சார ஆய்வு நிறுவனத்துக்கு பா.ஜ.க. எம்.பி.யான வினய் சகஸ்ரபுத்தேவை நியமித்தார்கள். வாழ்நாளில் ஒரு ஆய்வுக் கட்டுரையைக் கூட எழுதாத சுதர்சன ராவ் என்ற ஒருவரை ICHR என்ற வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக நியமித்தார்கள். புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்கள் 22 பேர் கொண்ட குழுவை அவர் வந்ததும் கலைத்து சாதனை செய்தார். (அகில இந்திய பல்கலைக் கழக ஆசிரியர் மன்றங்களின் தலைவரான பேராசிரியர் ஜேம்ஸ் வில்லியம்ஸ் இது குறித்து விரிவாக எழுதி இருக்கிறார்)

பல்கலைக் கழகங்கள் மாநில அரசின் முழுமையான நிதி உதவியால் தான் நடக்கின்றன. எனவே, மாநில அரசுகளின் எண்ணப்படி தான் பல்கலைக் கழகங்கள் நடத்தப்பட வேண்டும். மாறாக ஆளுநர்கள் தங்கள் விருப்பத்துக்கு நடத்தலாம் என விட முடியாது. ரவி இப்போது இருப்பார். நாளை, ‘மணிப்பூர்’ ஆளுநராக பந்தாடப்பட்டு விடுவார். அவரால் நியமிக்கப்படும் துணைவேந்தர்களுக்கு அவரால் உத்தரவாதம் தர முடியுமா?

**மாணவர் சேர்க்கை விதிமுறைகள் இன்னும் கேவலமாக இருக்கின்றன. இளநிலை மற்றும் முதுநிலை மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு நடத்துதல் மிக மோசமானது ஆகும். இறுதித் தேர்வுகளில் வெற்றி பெற்றுத் தான் அவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் நுழைவுத் தேர்வு வைப்பது அபத்தம் ஆகும். நுழைவுத் தேர்வுகள் பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்விக்கான சேர்க்கையைக் குறைத்துவிடும். மாறுபட்ட கல்வி முறைகள் கொண்ட நாட்டில் ஒரே விதமான நுழைவுத் தேர்வு என்பது நடைமுறைக்கு ஒவ்வாது.**

மாணவர்கள் தங்கள் மேல்நிலைப்பள்ளி பாடப்பிரிவைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு பட்டப்படிப்பையும் தொடர அனுமதிக்கும் முறை என்பது போதுமான அடிப்படை பாட அறிவு இல்லாமல் உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தேவையற்ற கல்வி அழுத்தத்தை உருவாக்கும். கலைப் பாடங்களைப் படித்தவர்களை, அடுத்து உயர் பொறியியல் பாடம் படிக்க அனுமதிப்பதும் மிக மோசமான பின் விளைவுகளை உருவாக்கும். என்ன மனநிலையில் இது போன்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டது எனத் தெரியவில்லை.

**யாரும் படிக்கக் கூடாது, படித்தாலும் உருப்படக் கூடாது என்று நினைப்பவர்களால் தான் இது போன்ற விதிமுறைகளை வகுக்க முடியும்.**

**பல்கலைக் கழகங்களை உருவாக்கும் அதிகாரம் மாநிலப் பட்டியலில் (பிரிவு 32) தான் இருக்கிறது. அப்படியானால் பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கும் - வழிநடத்தும் - தலைமை வகிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு வேண்டாமா?**

**பல்கலைக் கழகங்களைக் காக்க கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முன் வர வேண்டும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2025) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள இலங்கை தமிழர்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சிவகங்கை மாவட்டம் ஒக்கூர்

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் முதல்வர் ஆய்வு !

## அரசு செய்துதரும் வசதிகள் - தேவைகள் குறித்து கேட்டறிந்தார்!

சிவகங்கை, ஜன. 23-

தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்து தருவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று அறிவித்ததோடு, இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்தார்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பணக் கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கி வருவதோடு, இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் மேம்பாட்டிற்காக சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2025), சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள இலங்கை தமிழர்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

ஒக்கூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் 227 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த முகாமில் முதற்கட்டமாக 90 வீடுகள் கட்டப்பட்டு கடந்த 17.9.2023 அன்று திறப்பு விழா நடைபெற்றது. நான்கு வீடுகள் கொண்ட தொகுப்பு வீடுகளுக்கு 20 லட்சம் ரூபாயும், ஒரு தனி வீட்டிற்கு 5.65 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது மற்ற முகாம்தாரர்களும் புதிய வீடுகள் வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன்பேரில் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஆய்வின் போது, முதலமைச்சர் அவர்கள் முகாம்வாழ் இலங்கை தமிழர்களிடம் முகாமில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு, முகாமிற்கு தேவைப்படும் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார். அப்போது, முகாம் வாழ் தமிழர்கள் தங்கள் பயன்பாட்டிற்காக ஒரு சமுதாய நலக்கூடம் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை உடனடியாக ஏற்று முதலமைச்சர் அவர்கள் முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் பயன்பாட்டிற்காக சமுதாய நலக்கூடம் கட்டித்தரப்படும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கிருஷ்ணகிரியில் மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் ஏற்பாட்டில்

# மாற்றுக்கட்சியினர் 1300 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில்!

*கிருஷ்ணகிரி, ஜன.23-*

*கிருஷ்ணகிரியில், அ.தி.மு.க., நாதக பா.ஜ.க. மற்றும் பா.ம.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 1300பேர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்ற இணைப்பு விழாவில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில், நாம் தமிழர் கட்சி செய்தி தொடர்பாளர் கவுதமன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சூர்யா, பர்கூர் சட்டமன்ற தொகுதி தலைவர் சக்திவேல் மற்றும் காவேரிப்பட்டணம் நிர்வாகிகள் உள்ளிட்ட 1,000 பேர் இணைந்தனர். அதே போல அ.தி.மு.க. மீனவரணி ஊத்தங்கரை ஒன்றிய செயலாளர் ரத்னம் மற்றும் பாஜ மண்டல பொது செயலாளர் சங்கீதா தலைமையில், 300க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந் தனர்.*

*அவர்களை வரவேற்று அமைச்சர் சக்கரபாணி பேசுகையில், ‘பெண்ணுரிமைக்காக போராடிய பெரியாரை, நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான், யாருக்காகவோ விமர்சித்து பேசி வருகிறார். அதனால் தான் ஆயிரக்கணக்கான தம்பிகள். இன்று தி.மு.க.வில் இணைந்துள்ளீர்கள். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவாக்கிய இந்தியா கூட்டணி. நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் வென்றது. வரும் சட்டசபை தேர்தலில், 200 தொகுதிகள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் இளைஞர்கள் வருகையால் அது கண்டிப்பாக உயரும். நீங்கள் அனைவரும் கடுமையாக உழைப்பீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.*

*இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் நாகராஜ்,*

*மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம். பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் டாக்டர் மாலதி நாராயணசாமி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கிருஷ்ணமூர்த்தி, நரசிம்மன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், சுப்பிரமணி, மகேந்திரன், ராஜேந்திரன், அறிஞர், சாந்தமூர்த்தி, எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், குண.வசந்தரசு பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை வெங்கட்டப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள், சாஜித் , பார்த்திபன் மற்றும் அன்பரசன் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வருகின்ற பிப்ரவரி 6 மற்றும் 7ம் தேதிகளில் வருகை தருவது தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. உடன் நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு,மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன்,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான்,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை)ராஜா(சங்கரன்கோவில்) மாநகர காவல் ஆணையர் சந்தோஷ் கதிமீனா, மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் உள்பட பலர் உள்ளனர்.